

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.11.2024) சுங்கச்சாவடி தங்கம் மாளிகை திருமண மண்டபத்தில் சென்னை வடக்கு மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் நடைபெற்ற எளியோர் எழுச்சி நாள் விழாவில் 48 இணையர்களுக்கு திருமணங்களை நடத்தி வைத்து அவர்களை வாழ்த்தி, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் க.பொன்முடி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி., மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே.எபினேசர், ஐட்ரீம் இரா.மூர்த்தி, கே.பி.சங்கர் உள்பட தி.மு.கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை, நங்கநல்லூரில், நேற்று முன்தினம் (17.11.2024)முன்னாள் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் டாக்டர் ரங்கராஜன் அவர்கள் இந்தியாவின் 16 ஆவது நிதி ஆணையத்தின் தலைவர் டாக்டர் அரவிந்த் பனகாரியா அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.



கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.11.2024) காலை காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக்கழக துணைச்செயலாளர் டி.வீ. கோகுலகண்ணன் – செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் வசந்தா கோகுலகண்ணன் ஆகியோரின் மகன் தம்பி சரத் – கண்மணி இணையரின் திருமண விழாவை குறிஞ்சி இல்ல வளாகத்தில் நடத்தி வைத்தார். திராவிட இயக்க கொள்கைகள் மீது பற்றுக் கொண்டு, கழகப் பணியாற்றி வரும் டி.வீ. கோகுலகண்ணன் – வசந்தா கோகுலகண்ணன் ஆகியோரின் இல்லத் திருமண விழாவை நடத்தி வைத்ததில் மகிழ்ச்சி கொள்கிறேன். இல்லற வாழ்வில் அடி எடுத்து வைக்கும் சரத் – கண்மணி இணையர், கலைஞரும் தமிழ்நாடும் போல, கழகத்தலைவரும் நல்லாட்சியும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார். விழாவில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் க.செல்வம் எம்.பி., மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., கழக இளைஞரணி மாநில துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக் மற்றும் பலர் உடன் இருந்தனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகம், ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் இளைய சகோதரர் தம்பி குறள்வாணன் – ஓம்சக்தி இணையரின் திருமண விழாவை குறிஞ்சி இல்ல வளாகத்தில் நேற்று முன்தினம் (17.11.2024) நடத்தி வைத்தார். மணமக்கள் இருவரும் எல்லா வளமும் பெற்று, கலைஞரும் தமிழும் போல, நம் முதலமைச்சர் அவர்களும் உழைப்பும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார். உடன் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர், மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., கழக மாணவர் அணி இணைச் செயலாளர் பூவை ஜெரால்டு மற்றும் பலர் உடன் இருந்தனர்.

### என்.பஞ்சம்பட்டி திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில்

# ரூ.40 லட்சம் மதிப்பில் பேவர் பிளாக் தரை தளம் !

## அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்தார்!

திண்டுக்கல், நவ.19 -

என்.பஞ்சம்பட்டி திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் ரூபாய் 40 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட பேவர் பிளாக் தரை தளத்தை அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் என்.பஞ்சம்பட்டி இருதய ஆண்டவர் ஆலய ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட பேவர் பிளாக் தரைதள திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு திண்டுக்கல் மறை மாவட்ட ஆயர் தாமஸ தாமஸ் பால்சாமி தலைமை தாங்கினார். ஊர் தலைவர் சதீஷ் வரவேற்று பேசினார்.

மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் எம்.பாஸ்கரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்டக் கழகப் பொருளாளர் சத்திய மூர்த்தி, ஒன்றியப் பெருந் தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஒன்றியச் செயலாளர், பிள்ளையார்நத்தம் முருகேசன், மாவட்டக் கவுன்சிலர் பத்மாவதி ராஜகணேஷ், ஊராட்சி மன்றத் தலைவர் பாப்பாத்தி நாகராஜ், திண்டுக்கல் மதுரை மாவட்ட முதன்மை குரு பேரூட் பணி சகாயராஜ், மதுரை மாவட்டப் பொருளாளர் சாம்சங், என்.பஞ்சம்பட்டி அமலவை அருட் சகோதரி கரோலின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. உறுப்பினரும், மாநில துணைப் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஐ.பெரியசாமி ரூபாய் 40 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட பேவர் பிளாக் தரை தளத்தை திறந்து வைத்து விட்டு அங்குள்ள இருதய ஆண்டவர் ஆலயத்திற்கு சென்று வழிபாடு செய்த பின்பு பொதுமக்கள் மத்தியில் பேசினார்.

அப்போது அவர், 1989 ஆம் ஆண்டு நான் முதல் முதலாக சட்டமன்ற உறுப்பினராக பதவியில் இருந்த போது வன்னிய கிறிஸ்தவர்களை எம்.பி.சி. பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று குரல் கொடுத்தேன். அன்று முதல் இன்று வரை அதற்காக தொடர்ந்து பேசி வருகிறேன்.

கலைஞர் இடத்தில் இது குறித்து பேசி அதற்கான சட்ட வடிவம் கொண்டு வரும்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதன் பின்னர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்த உடன் மீண்டும் பேசி வருகிறோம். இது சம்பந்தமாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் என்னிடம் பேசினார்கள்.

ஒரு சமுதாயம் தொழில் அரசு பணி மற்றும் அனைத்திலும் முன்னேற வேண்டும். தொடர்ந்து 35 வருடங்களாக எனக்கு ஆதரவளித்து வரும் கிராமங்களில் என்.பஞ்சம்பட்டியும் ஒன்று. இந்த கிராம மக்கள் தங்களுக்கு மட்டுமின்றி ஊர் பொதுவிற்காக என்னிடம் பலமுறை கோரிக்கை வைத்துள்ளார்கள். அவற்றை நானும் நிறைவேற்றி உள்ளேன். இப்போது உள்ள பள்ளிக்கு சமையல் கூடம் மற்றும் கழிப்பறை வசதி கேட்டு விண்ணப்பம் கொடுத்துள்ளார்கள். அவற்றை உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க உத்தரவிட்டுள்ளேன். அதற்கான பணிகள் விரைவில் நடைபெறும்.

என். பஞ்சம்பட்டி கிராமத்துக்கு மருத்துவமனை வசதி வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்துள்ளார்கள்.

கிராமங்களின் வளர்ச்சியில் கால்நடைகளின் பங்கு அதிகம் உள்ளது. கால்நடைகள்தான் இன்று கிராம மக்களை வாழவைத்து வருகிறதுதை கருத்தில் கொண்டு இப்பகுதியில் மருத்துவமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் இடங்களும் தேர்வு செய்து மருத்துவமனை அமைக்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்டக் கவுன்சிலர் பத்மாவதி ராஜகணேஷ், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மருதாம்பாள் ஆல்பர்ட், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, ஒன்றியப் பொறியாளர்கள் ராமநாதன், பிரிட்டோ, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. அவைத்தலைவர் சிவக்குமார், பொருளாளர் ஜாதிக்கவுண்டன்பட்டி கருப்பையா, துணைச் செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், வசந்தா கென்னடி, ராஜேந்திரன், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, வீரக்கல் செல்வி காங்கேயன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ராணிராஜேந்திரன், வீரக்கல் ராஜேஸ்வரி தங்கவேல், துணைத் தலைவர் யூஜின்ராஜா, ஆலமரத்துப்பட்டி ஆறுமுகம், செட்டியபட்டி ராஜா, பிள்ளையார்நத்தம் உலகநாதன், அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் நந்தகோபால், அரசு ஒப்பந்தகாரர்கள் ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், ஆலமரத்துப்பட்டி அரவிந்தன், விக்னேஷ்வரன், ராஜகணேஷ், முன்னாள் ஒன்றிய அவைத்தலைவர் வீரையா, என்.பஞ்சம்பட்டி ஊராட்சி கழக முன்னாள் செயலாளர் உஷா கென்னடி, என். பஞ்சம்பட்டி கிளைச் செயலாளர் தாஸ் வேளாங்கண்ணி, மரிய இருதய ராபின், ரெமி ஜோசப் மற்றும் அருட் சகோதரிகள், ஊர் பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக என்.பஞ்சம்பட்டி திரு இருதய ஆண்டவர் ஆலய பங்குத் தந்தை பெர்னாட்ஷா நன்றி கூறினார்.



சென்னை, விமான நிலையத்தில், அரசு முறைப் பயணமாக தமிழ்நாடு வருகைபுரிந்துள்ள இந்தியாவின் 16 ஆவது நிதி ஆணையத்தின் தலைவர் டாக்டர் அரவிந்த் பனகாரியா அவர்களை, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நிதித் துறை அரசு முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் ஆகியோர் பூங்கொத்து மற்றும் புத்தகம் வழங்கி வரவேற்றனர்.

### பெருமை கொள்கிறேன் மகளே....!

# எளியோரின் வெற்றியில்தான் திராவிட மாடலின் வெற்றி அடங்கியிருக்கிறது!

## உலக கேரம் போட்டியில் 3 தங்கம் வென்று சாதனை படைத்த தமிழ்நாட்டு வீராங்கனை காசிமாவை வாழ்த்தி – முதல்வர் வலைதளப் பதிவு!



**சென்னை, நவ.19 – அமெரிக்காவில் நடைபெற்ற உலக கேரம் போட்டியில் தமிழ்நாடு வீராங்கனை காசிமா 3 தங்கம் வென்று சாதனை படைத்துள்ளதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், “பெருமை கொள்கிறேன் மகளே! எளியோரின் வெற்றியில் தான் திராவிட மாடலின் வெற்றி அடங்கியிருக்கிறது” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர் களின் வலைதளப்பதிவு வருமாறு :-

அமெரிக்காவில் நடைபெற்ற ஆறாவது உலக கேரம் போட்டியில் சென்னையைச் சேர்ந்த நம் தமிழ் மகள் காசிமா மூன்று பிரிவுகளில் முதலிடம் பெற்றுள்ளதற்குப் பாராட்டுகள்! வாழ்த்துகள்!



பெருமை கொள்கிறேன் மகளே... எளியோரின் வெற்றியில்தான் திராவிட மாடலின் வெற்றி அடங்கியிருக்கிறது.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று

# இரா.ஜெயராமகிருஷ்ணன் இல்ல திருமண வரவேற்பு விழா!

## அமைச்சர் பெருமக்கள் - கழக உடன்பிறப்புக்கள் பங்கேற்பு!

திருப்பூர், நவ. 19 -

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருப்பூர் தெற்கு மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன் (JRK) இல்ல திருமண வரவேற்பு விழா நடைபெற உள்ளது.

தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் நிகழும் பேரறிஞர் அண்ணா ஆண்டு 116 நவம்பர் மாதம் இன்று (19.11.2024 - செவ்வாய்க் கிழமை) மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை திருப்பூர் தெற்கு மாவட்ட அவைத் தலைவர், மடத்துக் குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராம கிருஷ்ணன் (JRK) - ஜெ. கலைச்செல்வி ஆகியோரது மகள் டாக்டர் ஜெ.ஐஸ்வர்யா - சேலம் எம்.சித்தேஸ்வரன் சி.அம்பிகா ஆகியோரது மகன் டாக்டர் சி.சூர்யா திருமண வரவேற்பு விழா சென்னை, அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, கிளை கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உற்றார், உறவினர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# கழக மருத்துவ அணி சார்பில் சிறப்பு மருத்துவ முகாம்கள்!

## கழக மருத்துவ அணி நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு!

சென்னை, நவ. 19-

தி.மு.கழக மருத்துவ அணியின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம், கழக மருத்துவ அணி மாநில தலைவர் மரு.கனிமொழி என்.வி.என் சோமு எம்.பி. தலைமையில் காணொளிக்காட்சி வாயிலாக நடைபெற்றது. கழக மருத்துவ அணி மாநில செயலாளர் மரு எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் - கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களது பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்துவது, டிசம்பர் 2024 முதல் மே 2025 வரை மண்டல அளவில் சமூகநீதி மற்றும் பகுத்தறிவு பாசறை கூட்டங்களை நடத்துவது, மண்டல அளவிலான நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டங்கள், மருத்துவ அணி உறுப்பினர் சேர்க்கை பணிகள், சமூக ஊடகங்களில் மருத்துவ அணி சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால மருத்துவ அணி வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மருத்துவ அணி துணைச் செயலாளர்கள் மரு ஜெ. அருண், மரு இராஜேஸ்வரி மோகன்காந்தி, மரு.அஞ்சுகம் பூபதி, எஸ்.ஏ.இரமேஷ், மரு திலீப்குமார் உள்ளிட்டோர் பல்வேறு கருத்துகளை முன்வைத்தனர்.

மருத்துவ அணி துணைத் தலைவர்கள் மரு செந்தில்நாதன், மரு எ.வ.வே.கம்பன், இணைச் செயலாளர்கள் மரு இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., மரு ஆர்.கோகுல் கிருபாசங்கர், துணைச் செயலாளர்கள் மரு ஆர்.டி.அரசு, மரு ஆர். அண்ணாமலை, மரு கலைகதிரவன், திருமதி திலகவதி ஜெயராஜ், இராஜேஷ் பாபு, மன்சூர் அலிகான், செண்பக விநாயகம் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டத் தலைவர்கள் உள்ளிட்ட நிர்வாகி கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.